**ON VC from Office of Assistant Commissioner, Kulathur, Chennai**
**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC No. 109 of 2015** |
| Deposition of witness | : | **PW - 2** |
| Name | : | முத்து ராசா |
| Father Name | : | தங்கமுத்து |
| Age | : | **35** |

**Accused absent**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 15.06.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது K5 பெரவலூர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக உள்ளேன். இந்த வழக்கின் எதிரி ஆறுமுகத்தை எனக்குத் தெரியும். நான் இதற்கு முன்பு 27.01.2015 தேதியில் முறப்பநாடு காவல் நிலையத்தில் யூத் பிஹேரியராக இருந்தபோது மாலை 04.00 மணியளவில், காவல் ஆய்வாளர் பெர்னாட் சேவியர், முதல் நிலை பொன்ராம் ஆகியோருடன் வல்லநாடு - கலியாவூர் ரோட்டில் காளான்கரை விளக்கின் அருகில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது TN 72 AA 2013 என்ற பதிவு எண் கொண்ட டிப்பர் லாரி ஊரிலிருந்து வெளியே வந்தது.

2. வாகனம் எங்களை நெருங்கிய சமயத்தில் அந்த வாகனத்தை நிறுத்திவிட்டு அதன் ஓட்டுனர் இறங்கி ஓடினார். அவரை விரட்டி பிடித்த போது விசாரணையில் அவர் கலியாஊரைச் சேர்ந்த கணபதி தேவர் மகன் ஆறுமுகம் என்று தெரிவித்தார். விசாரித்த போது லாரியில் மணல் எடுத்து வந்ததற்கான ரசீது இல்லாததால் அவர் ஓடியதாக தெரிந்து கொண்டோம். அந்த இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லாத காரணத்தினால் கைப்பற்றுதல் மகசலில் மேற்படி லாரி கைப்பற்றியதற்கு சாட்சியாக

நான் கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் கனிம வள அதிகாரி, பொதுப்பணி துறையை சேர்ந்தவர்களோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் அன்றைய தினம் காவல் ஆய்வாளரின் வாகனத்தில் ரோந்துக்கு சென்றோம். நான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பெர்னாடு சேவியர் இந்த வழக்கில் புகார் மனு கொடுத்து அவரே விசாரணை அதிகாரியாகவும் இருந்துள்ளார் என்றால் அவர் புகார் கொடுத்தது பற்றி எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் ஏழாவது காலத்தில் வாகனத்தின் பதிவு எண் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆற்று மணல் எங்கிருந்து எடுத்துவரப்பட்டது என்று என்னிடம் சொல்லவில்லை என்றால் என்னிடம் சொல்லவில்லை, காவல் ஆய்வாளரின் விசாரணையில் சொல்லி இருக்கலாம்.

2. இந்த வழக்கில் ஆற்று மணல் மதிப்புச் சான்று எதுவும் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவ பகுதியானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் இல்லை அது கிராமப் பகுதி, பொதுமக்கள் நடமாட்டம் அந்தளவுக்கு அங்கு இல்லை. நாங்கள் அன்றைய தினம் எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்று சொல்ல இயலுமா என்றால் இயலாது, சரியாக தெரியவில்லை. எதிரியையும் அந்த வாகனத்தையும் வீட்டிலிருந்து எடுத்துச் சென்று புள்ளி விபரக்காணத்திற்காக பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்று

சொன்னால் சரியல்ல. எதிர்க்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எங்களது உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் எதிரியின் மீது வழக்கு புனையப்பட்டு அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.06.15 05:39:48 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்

(ON VC from District Court VC room, Tenkasi)
DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.1, SRIVAIKUNTAM

| | | |
|---|---|---|
| Case number | : | CC No. 109 of 2015 |
| Deposition of witness | : | PW - 3 |
| Name | : | பெர்னார்ட் சேவியர் |
| Father Name | : | பிரான்சிஸ் |
| Age | : | 54 |

**Accused present**

**Remote site co-ordinator - Tmt.Muthlakshmi, Assistant, PDJ Court, Tenkasi.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 15.06.2026.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தென்காசி மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் காவல் ஆய்வாளராக உள்ளேன். கடந்த 27.01.2015 ஆம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் முதல் நிலை காவலர் பொன்ராம் மற்றும் இளைஞர் காவல் படை சேர்ந்த முத்துராஜா ஆகியோர் சகீதம் வல்லநாடு - கலியாவூர் ரோட்டில் காளான்கரை விளக்கில் வாகன சோதனையில் இருந்தபோது, ஊருக்குள் இருந்து வெளியே வந்த TN 72 AA 2013 என்ற பதிவு ஏன் கொண்ட டிப்பர் லாரியை தணிக்கை செய்த போது அதில் அரசு அனுமதி இல்லாமல் திருட்டுத்தனமாக இரண்டு யூனிட் அளவிற்கு ஆற்று மணல் ஏற்றி வந்த குற்றத்திற்காக மேற்படி வாகனத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி, எதிரியான மேற்படி வாகனத்தின் ஓட்டுனர் மற்றும் உரிமையாளர் ஆறுமுகத்தை கைது செய்தேன்.

2. மேற்படி கைப்பற்றுதல் மகசரில் கையொப்பம் செய்ய தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராத காரணத்தினால் என்னுடன் இருந்த பொன்ராம் மற்றும் முத்துராஜா ஆகியோரின் கையொப்பம் பெற்றேன்.

**மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 18.00 மணிக்கு மேற்படி எதிரி ஆறுமுகம் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் நிலையம் வந்து, நிலைய குற்ற எண் 31/2015, 379 IPC, 21(1) MMDR Act பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். பின்னர் எதிரி ஆறுமுகத்தை சோதனை செய்து தக்க வலிக்காவலுடன் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**

3. எதிரியிடம் கைப்பற்றிய டிப்பர் லாரி மற்றும் ஆற்று மணலை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 **அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 1 மற்றும் 2 பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கின் புகார்தாரர் நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி நான் தான் என்றால் சரிதான். அதேபோல் குற்றப் பத்திரிக்கையும் நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். கனிம வல அதிகாரியோ, பொது பணித்துறை அதிகாரியோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் அன்றைய தினம் ரோந்து சென்றதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் எந்த வாகனத்தில் ரோந்து

சென்றோம், எத்தனை வாகனங்களை தணிக்கை செய்தோம் என்று காட்ட எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. முதல் தகவல் அறிக்கையின் ஐந்தாவது காலத்தில் கண்டுள்ளபடி சம்பவ இடமானது சாலைகள் பிரியக்கூடிய இடம் என்று சொன்னால் சரிதான். நான் ஆவணத்தில் எந்த ஒரு இடத்திலும் ஆற்று மணல் எந்த ஆற்றில் இருந்து எடுத்து வரப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவ இடமானது எந்த ஆற்று படுகை என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆற்று மணலின் மதிப்பு எனது விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளிடம் எந்த ஒரு சான்றையும் நான் பெறவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. கைப்பற்றுதல் செய்யப்பட்ட இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. நான் பொதுமக்கள் யாரை கையொப்பம் செய்ய அழைத்தேன் என்ற விவரத்தை நான் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையின் ஏழாவது காலத்தில் வாகனத்தின் பதிவு எண் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான், எதிரியின் பெயர் குறிப்பிட்டுள்ளேன்.

4. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியில்ல. இந்த வழக்கு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பொய் வழக்கு என்று சொன்னாள் சரியல்ல. இந்த வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட காரணத்தினால் தான் பொதுமக்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்று சொன்னால் சரியில்லை. இந்த

வழக்கில் இரண்டு யூனிட் மணல் இருப்பதாக கூறும் நிலையில் அதற்கு எடை போட்ட நபரையோ அல்லது எடை ரசீது வழங்கியவரையோ நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

5. இந்த வழக்கின் எதிரி மற்றும் வாகனத்தை வீட்டில் இருந்து அழைத்து வந்து பொய்யாக வழக்கு புனைந்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அழைக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குக்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.06.15 05:40:03 +0530

நீதித்துறை நடுவர் எண் 1, ஸ்ரீவைகுண்டம்